# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா
ம
க்
கா
ர
ன்

J
A
M
A
K
K
A
R
A
N

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 9 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 5**
**MAY 2025 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




அன்பான வாசகர்களுக்கு,

கர்த்தருடைய கிருபையால் நான் சுகமான இருக்கிறேன். என் அலுவலகத்துக்கு செப்டம்பர் மாதம் முதல் வந்து போகிறேன், 40 நிமிடங்கள் தொடர்ச்சியாக அலுவலகத்தில் உட்கார்ந்து எழுதினால் உடனே தளர்ச்சி உண்டாகிறது. உடனே சிறிது நேரம் படுத்து எழுந்தால் சரியாகிவிடுகிறது. சில சமயம் படுக்கையிலேயே **வைத்து எழுதும் டெஸ்க்** வைத்து எழுதுகிறேன். எப்படியோ மூன்று மாதத்துக்கு செய்திகளை தொகுத்து முடித்துவிட்டேன். இனி மலையாளம் ஜாமக்காரனுக்காக **திருவனந்தபுரத்தில்** உள்ள சகோதரர்கள் யாரையாவது வரவழைத்து நான் சொல்ல மலையாளத்தில் மொழிபெயர்த்து எழுதுவார்கள். அதையும் எப்படியோ எழுதி முடித்துவிடுவேன் என்று நினைக்கிறேன். ஜெபித்துக்கொள்ளுங்கள், நானும் உங்கள் அனைவருக்காகவும் ஜெபித்துக்கொள்கிறேன்.

நான் அலுவலகத்துக்கு போனால்தான் 0427-2387499, 2386464 அகிய லேண்ட் லைன் போன்களை எடுத்து பேசுகிறேன். ஆகவே வாசகர்கள் கூடியவரை மொபைல் போன் 9894261333 வழியாக மட்டும் பேச முயலுங்கள். தேவ கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.

- Dr. **புஷ்பராஜ்**

# MAY- 2025

# ஒரு தகப்பனின் தவறுகள்

Selected

ஒரு குடும்ப தலைவனின் தன்மையை அவனுடைய குடும்பத்தின் நிலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாய் உள்ளது. **குடும்பத் தலைவன்** தன் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் **முன்மாதிரியாக வாழ்ந்து** அவர்களை சரியான விதத்தில் வழிநடத்த **வேண்டியவனாக இருக்கிறான்.** அவனுடைய தவறுகள் முழுக் குடும்பத்தையும் பாதிக்கும் அது நிகழ்காலத்தில் மனைவியினதும், எதிர்காலத்தில் பிள்ளைகளினதும் வாழ்வை சின்னாபின்னமாக்கிவிடுகிறது.

குடும்பத்தின் தலைமைத்துவம் என்பது குடும்ப விவகாரங்களை ஒழுங்காகக் கவனித்து நடத்தும் கடமையை உள்ளடக்கிய ஒரு பெரிய பொறுப்பாகும். இதில் ஏற்படும் தவறுகள், பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். இதற்கு வேதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள **லோத்து** எனும் மனிதனின் குடும்பம் ஒரு சிறந்த உதாரணமாய் உள்ளது.

**லோத்து** என்பவன், நம் விசுவாசத் தந்தையான **ஆபிரகாமின்** இளைய சகோதரனின் மகன், ஆபிரகாம் தன் சொந்த இடத்தை விட்டுக் கானான் தேசத்திற்குச் செல்லும்போது அவனுடன் சென்றான். (ஆதி 11:31, 12:4, 13:1) இவர்கள் கானானில் இருக்கும்போது லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்து யோர்தான் நதிக்கு அருகான சமபூமியில் சிறிது காலம் இருந்து, பின் சோதோம் எனும் நகரில் குடியேறினான். (13:8-13, 14:1-6) லோத்து ஒரு **நீதிமானாக இருந்தபோதிலும்** (2 பேதுரு 2:8) தன்னுடைய குடும்ப பொறுப்பில் பல **தவறுகளைச் செய்துள்ளான்.**

**லோத்து** தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் ஒழுங்கான தலைமையத்துவத்தை கொடுக்காமையால் அவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். அவனுடைய தவறு இன்றைய குடும்பத்திலுள்ள தலைவர்களுக்கு எச்சரிப்பாக இருப்பதினால் அவற்றைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்த்து, நம்முடைய தவறுகளைத் திருத்திக் கொள்வோம்.

## 1 அவன் தன் மனைவியை வழி நடத்ததுவதில் தவறிழைத்தான்

நீதிமானான லோத்து தன் குடும்ப வாழ்வில் விட்ட முதல் தவறு, **தன் மனைவியைச் சரியான விதத்தில் வழிநடத்தத்** தவறியமையேயாகும். ஆபிரகாமுடன் தன் சொந்த

ஊரை விட்டு வரும்போது தனி மனிதனாக வந்த லோத்து சோதோமில் குடும்பமாக வாழ்வதிலிருந்து அவன் ஒரு **சோதோமிய பெண்ணையே** திருமணம் முடித்திருக்வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. சோதோம் பாவத்தினால் நிறைந்திருந்த ஒரு நகரமாகும். (ஆதி. 18:20) இத்தகையை **நகரத்திலிருந்து தனக்கொரு** மனைவியை பெற்றுக்கொண்ட லோத்து அவளை **தேவனுக்குள் வழிநடத்த தவறிவிட்டான்.** லோத்து **தேவனை அறிந்திருந்த** மனிதனே, அவன் சோதோம் நகர அக்கிரமங்களைக் **கண்டு, கேட்டும்** நீதியுள்ள தன்னுடைய இதயத்தில் வாதிக்கபட்ட ஒரு நீதிமான் (3 போதுரு 2:8) அப்படியிருந்தும் அவன் **தன் மனைவியைப் பாவ வாழியில் இருந்து** தேவனிடம் கொண்டுவரத் தவறிவிட்டான்.

லோத்து **தன் மனைவியைத்** தேவன் பக்கமாக கொண்டு வந்திருந்தால் சோதோமின் **அழிவில் இருந்து** அவள் தப்புவிக்கபட்டிருப்பாள். லோத்து நீதிமானகவும் ( 2 பேதுரு 2:8) ஆபிரகாமின் உறவினனாகவும் இருந்தமையினால் (அதி 19:29) சோதோமின் அழிவிலிருந்து அவனுடைய குடும்பத்தினரைக் காப்பாற்றுவதற்காகத் **தேவன் தன்** தூதர்களை அவர்களிடம் அனுப்பினார். (19:1-19) லோத்தின் குடும்பத்தினர் தேவ செய்தியாளர்களின் வற்புறுத்தல் காரணமாக சோதோமை விட்டு செல்லும்போது அவர்களது எச்சரிப்யையும் மீறி **லோத்தின் மனைவி** பின்னிட்டுப் பார்த்தமையால் அழிந்துபோனாள். (அதி 19, 16-17,26) **அவளுடைய இதயம் சோதோமிலேயே** இருந்தமையினால் சோதோமோடு சேர்ந்து அவளும் அழிந்தாள்.

சோதோம் மீது பற்றுடையவளாயிருந்த தன் மனைவியைத் **தேவன் மீது பற்றுடையவளாக மாற்ற லோத்து** தவறியமையினால் அவளை இழந்துவிட்டான். அவன் அவளை **தேவனுக்குள் வழி நடத்தியிருந்தால்** அவள் தேவ மனிதரின் வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து அழிவிலிருந்து தப்பியிருப்பாள். அவள் சோதோமை விட்டு வருவதை விரும்பாதவளாகவே இருந்தாள் ( ஆதி 19:15-16).

அவள் இவ்விதமாய் சோதோமை நேசித்தமைக்கு காரணம் அவளுடைய தலைவனான லோத்து அவளைக் கர்த்தருக்குள் வழி நடத்தாமையே என்பதை மறுப்பதற்கில்லை.

குடடும்பத்துக்குத் தலைமை தாங்கி நடத்துபவன் **தன் மனைவிக்கு** சரியான ஒரு **வழிகாட்டியாக** இருக்கவேண்டும். குறிப்பாக ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் தலைவன் தன் மனைவியை கர்த்தருக்குள் வழிநடத்தி அவிக்குரிய வாழ்வில் அவள் வளர உதவ வேண்டும். தன் மனைவியை ஆவிக்குரிய பிரகாரமாய்ப் பெலப்படுத்தி கிறிஸ்துவை

அறிகிற அறிவில் அவளை வளர்ப்பது ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பத் தலைவனிலும் தலையாய கடமையாகும்.

ஆவிக்குரிய விடயங்களில் தனக்கிருக்கும் சந்தேகங்களுக்குத் தகுந்த விளக்கங்களை மனைவி தன் கணவனிடத்திலேயே பெற வேண்டும் என தேவ வார்த்தை கூறுவதிலிருந்து (1கொரி 14:35) குடும்பத் தலைவன் தன் மனைவிக்கு ஆவிக்குரிய வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதை அறிந்திடக்கூடியதாக உள்ளது. மனைவியின் பக்தி விருத்திக்கு அவளுக்குத் தலையாயிருக்கும் கணவனே பொறுப்பாயிருக்கிறான். ஆயினும் லோத்து இவ்விடயத்தில் தவறிவிட்டான்.

லோத்தின் தவறை இன்றைய அநேக கிறிஸ்தவ குடும்பங்களில் அவதானிக்கலாம். குடும்பத் தலைவர்கள் தம் மனைவியின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமாக எதையும் செய்யாமல் இருப்பது மட்டுமல்ல அவர்கள் தங்களது ஆத்மீக வாழ்வைப்பற்றியும் அக்கறையற்றவர்களாக இருக்கின்றனர். ஒரு கிறிஸ்தவ தலைவனுடைய தலையாய கடமை தன் மனைவி தேவனுடைய வழிகளில் நடக்க அவளுக்கு உதவுவதேயாகும். ஏனெனில் மனைவியின் அவிக்குரிய வாழ்வு அவளுடைய கணவனிடமே ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இதனால் தன் பொறுப்பில் விடப்பட்டுள்ள தன் மனைவியைப்பற்றி கணவன் தேவனுக்குமுன் உத்தரவாதமுடையவனாய் இருக்கிறான்.

மனைவி தன் கணவனோடு சேர்ந்து நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக்கொள்ளுகிறவளாக இருக்கிறபடியால் (பேது 3:7) அவள் தேவனண்டை கிட்டிச்சேர கணவன் எல்லாவிதத்திலும் அவளுக்கு உதவுபவனாய் இருக்கவேண்டும். கணவன் தன் ஆவிக்குரிய கடமைகளில் தவறு இழையாது மனைவி தேவ ஆசீர்வாதங்களை பெறுவதற்கு தடையாய் உள்ளமையால் தன் மனைவியை உண்மையாக நேசிக்கும் கணவன் இத்தவறைச் செய்யக்கூடாது. தன் மனைவிக்கு ஆவிக்குரிய பாதிப்புகள் ஏற்பட அவன் இடமளிக்கக்கூடாது. லோத்தின் தவறு எல்லா குடம்பத்திற்கும் ஒரு எச்சரிப்பாகவே அமைந்துள்ளது.

## 2 அவன் தன் குமாரத்திகளை வளர்ப்பதில் தவறிழைத்தான்

லோத்து தன் மனைவியை வழி நடத்துவதில் மட்டமல்ல **தன் இரு குமாரத்திகளை** வளர்ப்பதிலும் தவறிழைத்தான். சோதோம் நகர மக்களது பாவம் நீதிமானான அவனுக்கு மனவேதனையை ஏற்படுத்தினாலும்கூட (2 பேதுரு 2:8) அவற்றின் பிழைகளைத் தன் பிள்ளைகளுக் சுட்டிக்காட்டி நீதியான வாழ்க்கை முறையை அவர்களுக்கு கற்பிக்கக்

தவறிவிட்டான். **அவனுடைய பிள்ளைகளின்** நடத்தை சோதோம் மக்களது பாவ வாழ்க்கை முறைகளைப் பிரதிப்பலிப்பனவாகவே இருந்தன. சோதோமினன் அழிவின் பின்னர் லோத்தின் **இரு பெண் பிள்ளைகளும்** அவனுக்கு **மதுவைக் குடிக்கக்** கொடுத்துத் தவறிழைத்தமையும் இதையே காட்டுகிறது,. (ஆதி 19:30-36) **சோதோம் நகரத்து அசுத்தமே அவர்களிலும் இருந்தது.**

சோதோம் நகர மக்களின் பாவங்களில் முக்கியமானது **தன்னினச் சேர்க்கையாகும்**. நகரத்தின் அழிவுக்கு முன் லோத்தை எச்சரிக்க வந்த **தேவ மனிதர்கள்** இருவரையும் தாங்கள் அறியும்படி தங்களுக்கு தரும்படி கேட்டு நகர மக்கள் ஆர்பாட்டம் செய்தபோது அவர்களுக்குப் பதிலாக **லோத்து திருமணமாகாத** தன் **இரு பெண் பிள்ளைகளையும்** அவர்களுக்குக் **கொடுக்க முன் வந்தது** இதை அறியத்தருகிறது. (அதி 19:4-8)

அறிதல் என்ற பதம் பழைய ஏற்பாட்டில் தாம்பத்திய உறவுக்கான இன்சொல்லாகப் பாவிக்கப்பட்டுள்ளது. நகர மக்களது கோரிக்கை **பாலியலோடு சம்பந்தப்பட்டதாக இராதிருந்தால்** லோத்து தன் பிள்ளைகளை கொடுக்க முன்வந்திருக்க மாட்டான். லோத்தின் இச்செயல் **நகர மக்களின் பாவத்துக்கு** உதவும் ஒரு செயலாக இருப்பதை மறுப்பதிற்கில்லை. அவன் பாலியலுக்கு தேவன் விதித்துள்ள எல்லையை மீறிச் செல்வது **பாவமல்ல** எனும் எண்ணத்துடன் இருந்ததையே அவனுடைய இச்செயல்கள் காட்டியமையினாலேயே அவனுடைய இரு பிள்ளைகளும் **அவனுடனே கூட உறவு கொண்டனர்.** அவன் தன் பிள்ளைகளுக்கு சோதோம் நகர மக்களது **பாலியல் பழக்க வழக்கங்கள்** பிழையானது என்பதைக் **கற்பித்திருந்தால் அவர்கள் இவ்விதம் தவறாக நடந்துகொண்டிருக்கமாமட்டார்கள்,.** அவன் சோதோம் நகரத்து மக்களது பாவத்தை அங்கீகரித்ததின் விளைவே இவ்வாறு விஸ்வரூபம் எடுத்தது. அவன் தன் பிள்ளைகளை வளர்ப்பதில் விட்ட தவறின் விளைவே இதுவாகும்.

ஒரு குடும்பத் தலைவனது முக்கிய கடமைகளுள் ஒன்று தன் பிள்ளைகளுக்குச் சிறுவயதிலிருந்தே தேவனுடைய வார்த்தையைத் கற்பித்து அவர்களை தேவனுடைய வழியில் நடத்துவதாகும். தேவன் தன் மக்களுக்கு கொடுத்த கட்டளைகளில் இதுவும் ஒன்றாகும் (நீதி 22:6) அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து அவைகளைத் தன் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டுள்ளார். (சங். 78:5)

பாடசாலை பாடங்களைக்கூட பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதுபோல தேவனுடைய வார்த்தையையும் தகப்பன் தன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதிக்க

வேண்டும் (உபா. 6:7) தகப்பன் தன் பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே தேவ வார்த்தையின்படி வளர்த்து வந்தாலேயே பிற்காலத்தில் அவர்கள் குடும்பத்துக்கு கௌரவத்தைக்கொண்டு வருபவர்களாய் இருப்பார்கள்.

உபா. 11:19,20ல் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்குத் தேவ வார்த்தையைப் போதிப்பதை பற்றியதாகும். இவ்விடத்தில் குடும்பத் தலைவன் தவறினால் எதிர்காலத்தில் அவனுடைய பிள்ளைகள் அவனுக்கு நிந்தையையும் அவமானத்தையும் கொண்டு வருவார்கள். (நீதி 29:15) லோத்தின் இத்தகைய தவறு ஒவ்வொரு தகப்பனுக்கும் எச்சரிப்பாக இருக்க வேண்டும்.

## 3. அவன் தன் மனதை வசப்படுத்துவதில் தவறிழைத்தான்

லோத்து தன் மனைவியை வழி நடத்துவதிலும் பிள்ளைகளை வளர்ப்பதிலும் தவறிழைத்தமைக்கு மூல காரணமாயிருந்தது அவன் தன் மனதை வசப்படுத்துவதில் தவறிழைத்தமையேயாகும். அதாவது தன் மனதைக் கட்டுப்படுத்தி அதை தேவனுக்குக் கீழ்ப்படுத்தி வாழத் தவறிவிட்டான். அவன் தனது ஆசை இச்சைகளின்படி வாழ்ந்தமையினால் அவனுடைய குடும்ப தலைமைத்துவம் பல தவறுகள் நிறைந்ததாக இருந்தது. சோதோம் நகரத்தில் லோத்து முக்கியமான ஒரு மனிதனாகவே இருந்தான். உறவினனான ஆபிரகாம் சோதோம் நகரத்தை எதிரிகளிடமிருந்து மீட்டுக்கொண்டமையினால் (ஆதி 14:12-17)

லோத்துக்கு அந்நகரில் மதிப்பும் மரியாதையும் இருந்தது. அவன் சோதோமின் நியாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தான். அக்காலத்தில் நகரத்தின் மூப்பர்களும் நியாயதிபதிகளுமே நகரத்தின் வாசலில் உட்கார்ந்திருப்பார்கள். லோத்தும் ஒரு நியாதிபதியாகவே நகர வாசலில் இருந்தான் (ஆதி 19:1)

அக்காலத்து நகரங்களில் அக-புற வாசல்களுக்கிடையிலான பகுதி நகரத்து நீதிமன்றமாக இருந்ததை அகழ்வு ஆராய்வுகள் அறியத்தருகின்றன. மேலும் நகரத்தின் மக்களுக்கும் லோத்துக்கும் ஏற்பட்ட பிரச்சனையின்போது லோத்தை நியாயம் பேசுபவன் என அவர்கள் குறிப்பிட்டதும் அந்நகர நியாயதிபதியாக இருந்ததை உறுதிப்படுத்துகின்றது. (ஆதி 19:9) மக்களை நியாயம் விசாரிப்பவனாக இருந்த லோத்து தன் மனதை நியாயமான வழியில் வைத்திருக்கத் தவறிவிட்டான்.

லோத்தின் குடும்பம் குழப்பமும் பிரச்சனைகளும் மிக்கதாக இருந்தமைக்குக்

காரணம் அவன் தேவ சித்தத்தின்படி தீர்மானம் எடுக்காதமையேயாகும். முதலில் ஆபிரகாமை விட்டு பிரிந்து சென்றபோது அவன் தன் **கண்கள் கண்டு, மனம் விரும்பிய** வளமான பிரதேசமான சோதோமுக்குச் சென்றான் (ஆதி 13:10-12, 14:12)

வசதியாக வாழ்வதற்கான இடத்தைத் தெரிந்தெடுப்பதில் தவறேதுமில்லை. ஆனால் லோத்து உலக சௌகரியத்திற்கும் செல்வத்துக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தது பிழையானது.

ஆபிரகாமைப்போல அவன் தேவ வழிநடத்தலில்படி செயற்படவில்லை. இதனால் அவன் பாவத்தினால் நிறைந்திருந்த இடத்தில் குடியிருந்தான். மட்டுமல்ல அவன் **தன் மனம் விரும்பிய சோதோம் பெண்ணைத் திருமனம் முடித்தான்.** அதனால் திருமணத்திற்கான தேவ நியதியை மறந்து தேவனை அறிந்தவளைத் தன் வாழ்க்கை துணைவியாகத் தெரிந்தெடுக்கத் தவறிவிட்டான். ( கொரி 6:14)

அதே சமயம் தன் பிள்ளைகளுக்கும் சோதோமிலேயே வாழ்க்கை துணைகளைத் தெரிந்தெடுத்ததும் (அதி 19:14) இதைப்போன்ற ஒரு தவறான செயலேயாகும். (உபா. 7:1-4) கடைசியில் தன் பிள்ளைகள் கொடுத்த மதுவைக் குடித்து அவர்களுடன் இழிவான செயலில் ஈடுபட்டான் (ஆதி 19:33-35) லோத்து தன் மனதைக் கட்டுப்படுத்தி வாழாமல் உலக சௌகரியங்களில் மயங்கி தேவனை மறந்து ஜீவித்தமையே அவனுடைய தவறுகளுக்கான மூல காரணமாகும்.

எந்த ஒரு மனிதனுக்கும் மனக்கட்டுப்பாடு அவசியம். மனம் போகும் போக்கெல்லாம் மனிதன் போகக்கூடாது. குடும்பத்திலுள்ள தலைவர்கள் தம்முடைய வாழ்விடம் வாழ்க்கைத் துணை என்பவற்றைத்தெரிவு செய்யும்போதும் தம் பிள்ளைகளுக்கு வரன்களைத் தேடும்போதும் லோத்தைப்போல தம் மன விருப்பத்தின்படி தீர்மானமெடுக்காமல் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும்.

அதே சமயம் உலக மக்களது பாவ பழக்ககங்ளிலும் மயங்கி விடக்கூடாது. உலக செல்வம் சௌகரியம் உல்லாசம் என்பவற்றில் மனதைப் பறிகொடுத்து விடக்கூடாது. லோத்தின் தவறுகளை எந்த ஒரு குடும்பத் தலைவனும் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய குடும்பம் இன்ப மயமானதாக இருக்கும்.

இயேசு கிறிஸ்து உங்கள் இல்லத்தில் இருந்தால் உங்கள் அயலகத்தார் அதை விரைவில் அறிந்து கொள்வார்கள் - (டி.எல்.மூடி)

பெற்றோரின் வாழ்வே பிள்ளையின் பள்ளிக்கூடமாய் இருக்கின்றது. - (ஜோன் பட்ரிஜ்)

பிள்ளைகளின் முதல் பள்ளிக்கூடம் அவனது குடும்பமே - (அனொன்)

பெற்றோரின் பரிசுத்த வாழ்வே பிள்ளையின் மிகப்பெரிய சொத்து -(சி.எச். ஸ்பெர்ஜன்)

# உண்மையும் உத்தமுமான ஊழியன்

**எங்கே நீ இருக்கிறாய்?** (ஆதி 3:9) **உன் சகோதரன் எங்கே?** (ஆதி4:9) **உன் பேர் என்ன?** (ஆதி 32:27) இவைகளெல்லாம் நம்முடைய தேவன் கேட்ட கேள்விகளாகும். மேலே குறிப்பிட்ட பகுதிகளை நான் வேதத்திலே வாசித்தபோது இவ்வாறான கேள்விகள் என் மனதில் எழுந்தது. **ஆதாம் எங்கே ஒளிந்திருக்கிறான்** என தேவனுக்கு தெரியாதா? ஆபேலுக்கு என்ன **நேரிட்டது** என்பது தேவனுக்குத் தெரியாதா? யாக்கோபினுடைய பெயர் என்ன என்பது தேவனுக்குத் தெரியாதா ? **தெரியும்.**

அவர் சகலவற்றையும் அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், வருங்காலத்தையும் அறிந்தவர். அவர் நம்முடைய இருதயத்தின் உள்ளான சிந்தையையும் அறிந்திருக்கிறார். தேவன் யாவற்றையும் அறிந்தவரயிருந்தாலும்கூட நாம் ஒவ்வொருவரும் கட்டாயமாக நமது வாழ்வைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டுமென்பதை நம்மிடத்தில் அறிவுறுத்திருக்கிறார்.

நாமோ நற்கிரியைகளின் மூலம் நமது இரட்சிப்பை சம்பாதிக்கவில்லை. அதற்கு மாறாக கிருபையினாலேயே இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் ஆக்கினை தீர்ப்புக்குட்படாமல், அதிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். இந்த சத்தியத்தை நம்மெல்லாரும் அறிந்தும் அதை ஏற்றுக்கொண்டுமிருக்கிறோம். ஆனால் அநேக வேளைகளில் நம்முடைய வாழ்வைக்குறித்து தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்பதையே மறந்து விடுகிறோம் அல்லவா! (ரோ. 14:12, எபி. 4:13) நம்முடைய சகல கிரியைகள் வார்த்தைகள் எண்ணங்கள் ஆகியவற்றைக் குறித்தும் நம் நேரத்தை எவ்விதம் செலவு செய்தோம் என்பதைக் குறித்தும் நமக்குக் கீழுள்ள மந்தையை எவ்வாறு மேய்த்தோம் என்பது குறித்தும் கணக்கொப்பிவிக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக நிற்கும் அந்த நாளில் வாழ்வின் ஒவ்வொரு காரியங்களைக் குறித்தும் நாம் அவரிடம் கணக்கு ஒப்புவிக்வேண்டும்.

கணக்கொப்புவிக்கிற உக்கிராணத்துவத்தைக் குறித்து மத்தேயு 26:14-30ல் தாலந்துகளைப்பற்றிய உவமையில் அறிவுருத்தப்பட்டுள்ளது . இந்த உவமையில் ஒரு தாலந்தை பெற்றவன் அதை உதாசீனப்படுதற்கோ அல்லது வீனாக்குவதற்கோ அவன் ஆக்கினைத் தீர்ப்படையவில்லை. மாறாக தன்னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட **தாலந்தை உபயோகிக்காததினாலேயே** அவன் ஆக்கினைத் தீர்ப்படைந்தான்,.

நமது வாழ்வை பின்னோக்கிப் பார்க்கும்போது சில நேரங்களில் நம் வாழ்வின் எந்தப் பகுதியிலும் தவறு இழைத்ததில்லை என்பதை உணரலாம். ஆனால் நாமே ஆராய்ந்து எப்போதாவது **நன்மையான காரியங்களைச் செய்ய தவறினேமோ** என்பதைச் சோதித்து அறிவதும் மிகவும் அவசியமாகும்.

தான் பெற்ற தாலந்தை உபயோகிக்கத் தவறியவன் அதற்குச் சாக்கு சொல்வதை நாம் அந்த உவமையிலே அறியலாம். இரு விதமான மக்கள் இருக்கின்றனர். ஒரு கூட்டத்தினர் தங்கள் குறைவுகள் மத்தியிலும் வாய்ப்புகளை அறிந்துகொள்கின்றனர். மற்றொரு கூட்டத்தினர் தங்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளில் **குறைவுகளை** மட்டும் காண்கின்றனர்.

அருமையான நண்பர்களே. எப்பொழுதாவது நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றாமல் சாக்கு சொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? ஆண்டவருக்கு நாம் சேவைசெய்யத் தவறவிட்டு அதற்கு நம் சூழ்நிலைகளையும் பின்னணியையும் நம் பெற்றோரையும் ஏன் தேவனையும் கூட நாம் குற்றஞ்சாட்டுகிறவர்களாய் இருக்கிறோமா?

கடைசியாக ஐந்து தாலந்துகளையும் இரண்டு தாலந்துகளையும் பெற்ற ஊழியர்களைப்பற்றி பார்ப்போம். ஐந்து தாலந்துகளையும் பெற்ற உக்கிராணக்காரர்கள் அதை இரு மடங்காக்கினார்கள். எஜமானன் அவர்ளைப்பார்த்து உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனே என்று புகழ்நதார். நமது மேலதிகாரி ஒருவேளை நம்மை இவ்வாறு புகழ்ந்தால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைவோம்? எல்லாவற்றிற்கும் மேலான வானத்தையும் பூமியையும் படைத்ததேவன், உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் என்று நம்மை புகழும்போது நமக்கு எவ்வளவு பெரிய சந்தோஷமும் பாக்கியமும் உண்டாயிருக்கும்.

நான் ஒருமுறை கேட்ட கதையை இந்த நேரத்தில் நினைவு கூறுகிறேன். ஒரு வயலின் வித்துவான் பெருங்கூட்டத்திறக்கு முன் இனிமையான இசையை மீட்டுக்கொண்டிருந்தான், அந்த வயலின் இசையில் மயங்கி கூட்டத்தினர் அந்த வித்துவானைப் புகழ்ந்து மெச்சிக்கொண்டிருந்தனர். மகிழ்ச்சி ஆரவாரம் செய்த கூட்டத்தினர் மத்தியில் ஒருவர் மாத்திரம் மூலையில் அமர்ந்து அந்த வயலின் இசையில் திருப்தியடையாதது போல எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் அமைதியாக அமர்ந்திருந்தார். இதைக் கவனித்துக்கொண்டிருந்த அந்த வித்துவான், மறுபடியும் முன்பைவிட மிகவும் நேர்த்தியாய் வயலினை இசைத்தார். இப்பொழுது கூட்டத்தினர் இம்முறை வாசித்த இசையில் முன்பைவிட அதிகமாய் உற்சகம் அடைந்தவர்களாக ஆரவாரம் செய்து தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர். அப்பொழுது அந்த வித்துவான் மூலையில் அமர்ந்திருந்த அந்த மனிதனை திரும்பிப் பார்த்தான். இம்முறையும் அந்த மனிதன் திருப்தியடையவில்லை என்பது அவனுடைய முகபாவனையிலே தெரிந்தது. கடைசியாக அந்த வயலின் வித்துவான் மறுபடியுமாகத் தன் திறமையை எல்லாம் உபயோகித்து மற்றொரு இசையை நேர்தியாக வாசித்தார். அப்பொழுது குழுமியிருந்த கூட்டத்தினர் தமது இருக்கைகளை விட்டெழுந்தவர்களாய் தங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்ததை தெரிவித்தபோது அந்த அரங்கமே அதிர்ந்தது. அந்த வேளையில் அந்த மனிதனின் முகத்தில் தான் திருப்தியடைந்ததற்கான புன்னகை தெரிந்தது. அதினால் அந்த மனிதன் பாராட்டுவதை அறிய முடிந்தது. இதைப் பார்த்த அந்த வித்துவான் அப்பொழுதுதான் முழு திருப்தியடைந்தான். அந்த மூலையில் அமர்ந்திருந்த அந்த மனிதன் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்தான் இந்த வயலின் வித்துவானை பயிற்றுவித்து உருவாக்கிய அவரது குரு.

அருமையான நண்பர்களே ! நம் வாழ்வில் கூட சிலர் நம்மைப் புகழ்ந்து பேசுவார்கள். சிலர் நம்மைக் குறை கூறுவார்கள். இந்த உலகம் நம்மை பற்றிக் கூறுபவை மதிப்பற்றவை, ஆனால் தேவன் நம்மைப்பற்றி என்ன கூறுவார்? உண்மையும் உத்தமுமான ஊழியக்காரன் என்று தேவன் நம்மை அழைப்பாரா?

ஆண்டவர் தாமே நம் தேவனுக்குப் பிரயமும் அங்கீகரிக்கபட்டதுமான ஒரு வாழக்கையை வாழக் கிருபை செய்வாராக. நம்முடைய வாழ்க்கையின் இறுதியில் நம் வாழ்க்கையைக் குறித்தான கணக்கொப்புவிக்க ஆண்டவருக்கு முன் நிற்கும்போது தேவனிடமிருந்து புகழ்ச்சியையும் கனத்தையும் பெறுவோமாக.

my9

# பிஷப் தேர்ந்தெடுப்பு

- Dr. Pushparaj

C.S.I. (Church of South India) தென் இந்திய திருச்சபை

C.N.I. (Church of North India) வட இந்திய திருச்சபை

மிஷனரிகள் வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்து ஊழியம் செய்து இயேசுவை அறிவித்ததினால் **வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும்** பல சபைகள் உருவாயின. வட இந்தியாவில் பேப்டிஸ்ட் சபைகளும் மற்ற சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படியே தென் இந்தியாவிலும் C.M.S., L.M.S. பேன்ற சபைகள் உருவாயின.

1947ம் ஆண்டு ஐந்து மாநிலங்களில் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட மெதடிஸ்ட், ஆங்கிலிக்கன், லூத்தரன், பிரஸ்பிட்டேரியன் ஆகிய சபைகள் இணைந்து **ஒரே பெயரின்** கீழ் கிறிஸ்தவ சபைகள் இயங்குவது நல்லது என்று கண்டு இந்தியாவில் வட இந்திய திருச்சபை C.N.I. என்றும் தென் இந்திய திருச்சபை C.S.I.என்றும் உருவாக்கினர். இவைகளுக்கு புரோட்டஸ்டன்ட் சபைகள் என்று அழைத்தனர். இவைகளில் ஒன்றுதான் C.S.I. தென்னிந்திய திருச்சபை ஆகும். C.S.I. தென் இந்திய திருச்சபையை **கர்னாடகா, ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு இலங்கை யாழ்பானம்** என்று பிரித்து C.S.I. என்று பெயர் வைத்தனர். மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு **மாநிலங்களிலும்** நிர்வாகத்துக்கு வசதியாக மொத்தம் **24 திருமண்டலங்களை** உருவாக்கினார்கள். இதில் இலங்கை தனி நாடாக இருந்தாலும் இந்தியாவிலுரந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் இலங்கை யாழ்பானத்தில் Jaffna குடியேறி தனி **தமிழ்நாடாக** இ்யங்குகிறது. ராஜாக்கள் காலத்தில் இலங்கையிலேயே பிறந்து வளர்ந்தவர்களுக்கு இலங்கை சிங்கள மக்கள் தோன்றும் அதே காலத்தில் தமிழர்களும் வாழ்ந்தார்கள் என்று சில சரித்திரங்களும் கூறுகிறதாக கூறுகிறார்கள்

தமிழ்நாட்டிலிருந்து யாழ்பானத்தில் குடியேறிய இந்திய C.S.I.சபைகள் அங்கு அவர்களால் உருவாகப்பட்டது. தன் C.S.I.யாழ்பான சபை மக்கள். அதனால் தென்இந்திய C.S.I. சபை திருமண்டலத்தோடு இணைந்து 25வது திருமண்டலமாக இணைத்தார்கள்.

பல காலமாக C.S.I.சபைக்களுக்கான **பிரதான பிஷப்பாக** யாரையும் தெரிந்தெடுக்காமல் இருந்து. 2025 ஆகஸ்ட் மாதம் மாடரேட்டருக்கான தேர்தல் ஏற்பாடுகள் தொடங்கப்பட்டு ஒருவழியாக C.S.I. மாடரேட்டர் தெரிந்தெடுக்கப்பட்டார். அதன்பின் மடமடவென்று திருமண்டல பிஷப்மார் தெரிந்தெடுக்கபட்டனர்.

**C.S.I. மாடரேட்டர் ஆயர்களையும் புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட மற்ற பிஷப்மார்களையும் ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலும் என் சார்பிலும் வாழ்த்துகிறேன்.**



# பேராயர் தகுதி

(கன்னியாகுமரி பேராயர்(ஓய்வு) Rt. Rev. Dr. செல்லையா, M.A.,B.D., M.Th. அவர்கள் தன் திருமண்டல மாத பத்திரிகையில் பேராயர் தகுதியைப்பற்றி எழுதியுள்ளார். அது பேராயர்கள் தேர்தல் காலத்தில் எழுதிப்பட்டது. இப்போது தேர்ந்தெடுக்கபட்ட பேராயர்களுக்கும் இது பிரயோஜனப்படும் என்பதற்காக இங்கு வெளியிடுகிறேன்.)

பேராயர் தேர்தலுக்கும் அந்தந்த திருமண்டல பேராயர் தெரிந்தெடுப்புக்கு உரிய ஆணையை மாடரேட்டரிடமிருந்து அந்தந்த **பேராய செயலர்** பெற்றுக்கொண்டு காரிய நிர்வாக குழுவை கூட்டி பேராயர் பெயர் பட்டியலை தேர்ந்தெடுக்கும் சிறப்பு பேராய மாமன்றத்தை கூட்டுவதற்கான தீர்மானத்தை எடுப்பார்.

போராயர் தேர்தலை நடத்துவதற்காக திருச்சபை உறுப்பினரில் 5 பேர் கொண்ட குழுவை காரிய நிர்வாக குழு நியமிக்கும் இதில் ஒருவர் கன்வீனராக செயல்படுவார்.

**பேராயர் வேட்புமனுவுக்குத் தகுதி உடையவர் C.S.I. தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர்** ஒருவராக இருக்கவேண்டும். 5 வருட பணிக்காலம் குறையாது எஞ்சி இருக்க வேண்டும். பின்னர் வேட்பாளர்களின் தகுதி மற்றும் விபரங்களைச் சேகரித்து மனுவை வாபஸ் பெறுவோரின் பெயரை நீக்கிவிட்டு இறுதிப் பட்டியலைத் தயாரித்து மாமன்ற உறப்பிகளுக்கு அனுப்பி வைக்கும். பின்னர் பேராயர் தேர்தல் நடைபெறும். சிறப்புப் பேராய மாமன்றக் கூட்டத்தில் 50% வாக்குகள் பெற்ற இரண்டுக்குக் குறையாமல் நான்கிற்கு மிகாத பெயர்ப்பட்டியலைத் தேர்வு செய்து தென்னிந்தியத் திருச்சபை சினாட்டிற்கு அதன் தேர்வு நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கும். தென்னிந்தியத் திருச்சபைச செயலாளர் இப்பெயர்ப்பட்டியலை அந்தப் பேராயத்தின் மக்களுக்கு அறிவித்து குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்பாளர்கள் பற்றிய கருத்துக்களைத் திருச்சபையின் மக்களிடமிருந்து கேட்டறிவார். பின்னர் பிரதமப் போராயர் தலைமையில் தென்னிந்தியத் திருச்சபையின் காரிய நிர்வாக்கக் குழு உறுப்பினர்களில் **இரண்டு** பேராயர்கள், **இரண்டு** போதகர்கள் **இரண்டு** திருச்சபை உறுப்பினர்கள் அடங்கிய தேர்வுக்குழு அமைக்கப்படும். அக்குழு **பெயர்ப்பட்டியலிலிருக்கும் ஒருவரைப்** பேராயராகத் தேர்ந்தெடுத்து C.S.I.

சினாட் காரிய நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். ஒப்புதல் பெற்றபின் **புதிய பேராயரின் பெயரைப்** பிரதமப் பேராயர் அதிகார பூர்வமாக அறிவிப்பார். பின்னர் ஒரு குறிப்பிட்ட நாளில் பேராயரின் அபிஷேக மற்றும் நியமன ஆராதனைகள் நடைபெறும்.

பேராயர் தேர்தல் **ஜனநாயக** முறைப்படி நடைபெற்றாலும் பிற தேர்தல்களுக்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டென்பதை புரிந்துகொள்ள வேண்டும். **யாரைப் பேராயராகக் கடவுள் தெரிந்துகொள்கிறார் என்பது தான் இத்தேர்தலின் அடிப்படைத் தத்துவம்**. மாற்கு 10:45 இயேசு **தான் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்ய வந்தேன்.** எனக் கூறியதை மனதில் கொண்டு அவரைப் பின்பற்றுபவர்களும் அவரால் அழைக்கப்பட்டு, தேர்ந்து எடுக்கப்பட்டு **ஊழியம் செய்ய வந்தேன் என நினைத்து செயல்பட வேண்டும்.** மாமன்ற உறுப்பினர்கள் சபை மக்களோடு இத்தேர்தலுக்காக ஜெபித்து கடவுள் தமக்கு யாரை வெளிப்படுத்துகிறாரோ அவருக்கு வாக்களிக்க வேண்டும். பேராய **முக்கியப் பதவிகளில் மோகம்** கொண்டு ஒருவர் பேராயர் தேர்தலில் போட்டியிடுவது கடவுளுக்கும் திருச்சபைக்கும் **பிரியமானதல்ல,** அப்படிச் செய்பவர்கள் **இறைவனின் தேர்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கவில்லை என்று தான் பொருள்.** கடவுள் ஒருவரைத் தகுதிப்படுத்த பாரத்தோடு மன்றாடுவோம். **(பேராயர் கிறிஸ்துதாஸ் பாதச்சுவடுகள் - பக்கம் 289)**

## எனது அருட்பணியும் அனுபவங்களும்

இந்த கட்டுரையை எழுதும் நான் ஜெபத்தோடு திருநிலைப்படுத்தப்பட்டேன். அன்று எனது பதிலுரையாக

1 Priority to Prayer (ஜெபத்துக்கு முதன்மை)

2. Priority to Peace (சமாதானத்திற்கு முதன்மை)

3. Priority to Progress (முன்னேற்றத்திற்கு முதன்மை)

எனக் கூறியதை என்னால் இயன்ற அளவு செய்ய விருப்பம் கொண்டேன். பவுலடியார் II கொரி 10:8ல் **எங்களுடைய அதிகாரத்தை உங்கள் அழிவுக்காக அல்ல, உங்கள் வளர்ச்சிக்காகவே ஆண்டவர் தந்திருக்கிறார்.** இவ்வதிகாரத்தைப் பற்றிய சற்று அதிகமாகவே பெருமைப் பாராட்டினாலும் அதில் வெட்கப்பட ஒன்றுமில்லை என்கிறார்.

அருட்பணியின் மையமே **கடவுளின் வார்த்தை,** அதனை அடிப்படையாகக் கொண்டு **திருச்சபை திருமறை காட்டும்** வழியில் வாழ வழிகாட்டுவதே **அருட்பணின் நோக்கம்.** இந்த நோக்கம் கறைபடாது மற்றும் குறை வராதபடி இயன்ற மட்டும் பேராயர்

பணி செயல்பட போரய மக்கள் வேண்டுதல் செய்யவேண்டும். உங்கள் வேண்டிதல் தொடரட்டும். அருட்பணி சார்ந்த அலுவல்களில் நமது **சொத்துக்கள் நிறுவனங்கள்** மற்றும் நிர்வாகத்தில் பல எதிர்மறையான **சவால்கள் சங்கடங்கள்** வந்தாலும் நல்ல போராட்டமாகக் காணப்பட அருட்பணி அனுபவங்கள் சில. எனினும் பெருவாரியான பேராய மக்களின் **நீதி, அமைதி** மற்றும் **வாய்மை** பற்றிய பசி, தாகம் இவைகளை நானும் அனுபவித்தேன். இந்தப் பசி, தாகம் தொடரவேண்டும்.

அருட்பணியின் ஆற்றலால் அமைதியான மற்றும் ஆற்றலான வாழ்வு தொடர பவுலடியார் கூறும் அறிவுரை யாதெனில் இறுதியாக சகோதர சகோதரிகளே, **உண்மை**யானவை எவையோ, **கண்ணியமானவை** எவையோ, **நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ,** விரும்பத்தக்கவை **எவையோ,** பாராட்டுதற்குரியவை **எவையோ,** நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள்.

நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை , என் வழியாய்ப் பெற்றுக்கொண்டவை என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்படியுங்கள் அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார். (பிலி. 4, 8,9) அத்தோடு ஆண்டவரின் பொன்விதியதாக மத்தேயு 7:12ல் ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள் இறைவாக்குகளும் திருசட்டமும் கூறுவது இதுவே.

இவைகளையே இறுதி மட்டும் இயன்றவரை கடைப்படிப்போம். இறை ஆசி நம்மோடும் என்றும் நிறைவாக தங்கியிருப்பதாக.

- ***Rt. Rev. Dr.* செல்லையா** M.A., B.D., M.Th.,

கன்னியாகுமரி CSI டையோசிஸ்ஸின் முன்னாள் பேராயர்


## ONLINE BANKING (NEFT)

***Name : M G E PUSHPARAJ***

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# C.S.I. சபைகளுக்கு தலைமை பிஷப்பாக மாடரேட்டர் தெரிந்தெடுக்கப்பட்டார்



Most Rev. Dr. பேராசிரியர் K.**ரூபன் மார்க்** அவர்கள்

புதிதாக தெரிந்தெடுக்கப்ட்ட மாடரேட்டர் Most Rev. Dr. பேராசிரியர் K. ரூபன் மார்க் அவர்கள் அவர்கள் ஆந்திராவில் உள்ள கரீம் நகர் திருமண்டலத்தின் பிஷப்பாக இருந்தவர். இப்போது 24 திருமண்டலங்களுக்கும் தலைமை மாடரேட்டராக தெரிந்தெடுக்ப்பட்டார். மாடரேட்டர் அவர்ளை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பிலுமம என் சார்பிலும் வாழ்த்துகிறேன்.

Rt. Rev. **பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** அவர்கள்



Rt. Rev. **பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்**

இவர் **மெட்ராஸ் டையோசிஸ்** பிஷப்பாக தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார். இநத் டையோசிஸ் பெயர் மட்டும் **சென்னை** டையோசிஸ் என்று அழைக்கப்படாமல் **மெட்ராஸ்** என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. இவர் மெட்ராஸ் டையோசிஸ்ஸில் உள்ள **தலித்** மக்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பேன் என்பதாக டையோசிஸ் மக்கள் சிலர் கூறுகிறார்கள்.

மறைந்த முன்னாள் பிஷப் அசரீய அவர்களின் கொள்கையை பின்பற்றாமல் இருந்தால் சரி.



Rt.Rev. Dr. **வின்செண்ட் வினோத்குமார்**

Rt.Rev. Dr. **வின்செண்ட் வினோத்குமார்** அவர்கள்

இவர் **கர்னாடகா** மாநிலத்தின் மைய பகுதியான **சென்ட்ரல் C.S.I. டையோசிஸ்ஸின்** பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் I.E.M. மிஷனரி இயக்கத்திலும் இணைந்து சிலகாலம் ஊழியம் செய்ததால் மிஷனரி பாரம் உள்ளவர் என்று குறிப்பிடலாம்

Rt.Rev. Dr. **கம்மானுரி சந்தோஷ் பிரசன்னா ராவ்**



Rt.Rev. Dr. **கம்மானுரி சந்தோஷ் பிரசன்னா ராவ்**

இவர் ஆந்திராவில் **நந்தியால்** C.S.I. டையோசிஸ் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் தாண்டா கிராம சுவிசேஷ பணியில் உற்சாகமுள்ளவர். பல கிராம சபைகளையும் உருவாக்கியுள்ளார். ஆகவே நல்ல ஊழிய பாரம் உள்ளவர் என்று கூறலாம்.




Rt.Rev. **ஜோஸ் ஜார்ஸ்**

Rt.Rev. **ஜோஸ் ஜார்ஸ்** அவர்கள்

இவர் கேரளாவில் கொல்லம் – கொட்டாரக்கரா C.S.I. டையோசிஸ்ஸின் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டார். வாலிபர் மத்தியில் நல்ல ஊழியத்தை நிறைவேற்றியுள்ளார். சமூக தொண்டுகளிலும் ஆர்வம் உள்ளவர்.

Rt.Rev. **குரியன் பீட்டர்** அவர்கள்

இவர் **கொச்சின்** C.S.I. டையோஸ்ஸின் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டார்.



Rt.Rev. **குரியன் பீட்டர்**



Rt. Rev. Dr. A. **ஜேகப் விங்ஸ்டன்**

Rt. Rev. Dr. A. **ஜேகப் விங்ஸ்டன்** அவர்கள்

**சேலம் C.S.I. யின் புதிய திருமண்டலம்**

கோயமுத்தூர் டையோசிஸ் இரண்டாக பிரிந்து ஈரோடு – சேலம் C.S.I. டையோசிஸ் என்று உருவாக்கியுள்ளார்கள். முதலும் புதிய பிஷப்புமான Rt. Rev. Dr. A. **ஜேகப் லிவிங்ஸ்டன்** அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். இவர் சிறுவர் ஊழியத்திலும் VBS நடத்துவதிலும் மிகவும் ஆர்வமுள்ளவர். நன்றாக பாடும் தாலந்தை பெற்றவர்.

சேலம் சுதேசியான Dr. **புஷ்பராஜ்** ஆகிய நான் புது பிஷப் அவர்களை வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன்.

## பயத்தில் வாழும் கிறிஸ்தவர்கள்

மகாராஷ்ராவில் உள்ள **கிறிஸ்தவர்கள்** தங்கள் சமூகத்திற்கு எதிரான தொடர்ச்சியான வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் அரசியல் அறிக்கைகளுக்குப் பிறகு அச்சத்தில் வாழ்கின்றனர். ஒரு தொலைதூர கிராமத்தில் 14 கிறிஸ்தவ குடும்பங்கள் குறிவைக்கப்பட்டன. இது அருகிலுள்ள நகரங்களில் உள்ள விசுவாசிகளை பாதுகாப்புக்காக தங்கள் நம்பிக்கையை மறுபரீசீலனை செய்யத் தூண்டியது. இந்துக்களை மதம் மாற்ற முயற்சிக்கும் எந்தவொரு கிறிஸ்தவரையும் கொல்வதற்கு **ஒரு சட்டமன்ற உறுப்பினர் பணவெகுமதியை வழங்கியதையும்** தொடர்ந்து பதட்டங்கள் கடுமையாக அதிகரித்தன. அதே நாளில் கிறிஸ்தவத்திற்கு மாறும் **பட்டியல் சாதியினரின்** உறுப்பினர்கள் **அராங்க சலுகைகளை இழக் நேரிடும்** என்று எச்சரித்த மாநில முதல்வர் மதமாற்ற எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் திட்டங்களை அறிவித்தார்.

*– கிறிஸ்டியன் டுடே*

**MAY 2025**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.